B.T. Teachers in Government High Schools

*322 Q.—THIRUVALARGAL V. ISVARMURTI AND A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of B.T. Teachers appointed in the Government High Schools after 1st April 1970 in our State;

(b) the number among them whose services are not yet confirmed; and

(c) the reasons therefor?

அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பி.டி. (B.T.) ஆசிரியர்கள்

திருவாளர்கள் வ. ஈஸ்வரமூர்த்தி & எ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நமது மாநிலத்தில், 1—4—1970-க்குப் பின்னர் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட பி. டி. ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் இன்னும் பணியுறுதி செய்யப்படாதவர்கள் எத்தனை பேர்?

(உ) அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) பி-பிரிவு பள்ளிகளில் 2957 பி. டி. ஆசிரியர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டனர்.

(இ) 1—4—1970-க்குப்பின் பி. பிரிவு பள்ளிகளில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட எல்லா பட்டதாரி ஆசிரியர்களின் பணியும் வரன் முறை செய்யப்படும் என்று 3—3—1973 தேதியிட்ட கல்வித்துறை அரசு ஆணை 351-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, 3—3—1973 அன்று அரசு வெளியிட்ட ஆணை குறித்து. 5—3—1973-ம் தேதியன்று ஆசிரியர்கள் சில சந்தேகங்களை எழுப்பினார்களென்றும், அதற்கு அரசு சில விளக்கங்களைக் கொடுத்ததென்றும் தெரிகிறது. அவர்கள் எழுப்பிய சந்தேகங்கள் என்ன, அதற்கு அரசு அளித்த விளக்கங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

1973 ஏப்ரல் 2]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்கள் எந்த வகையில் வரன் முறைப்படுத்தப்படுவார்களென்று கேட்டார்கள். 2957 பேர்களில், தேர்வு ஆணைக் குழு எந்த அளவுக்கு வரன்முறைப்படுத்துகிறது என்பதற்கான அறிக்கையை எதிர்பார்க்கிறோம். அதில், தேர்வு ஆணைக் குழு யார் யாரை வரன்முறைப்படுத்தாமல் விடுகிறார்களோ, அவர்களை, நாம் நம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி வரன்முறைப்படுத்துவதென்ற முறையிலே, தேர்வு ஆணைக் குழுவிலிருந்து அறிக்கை வந்தவுடன், அதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமென்று அவர்களுக்கு விளக்கப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Will their services be confirmed from the date of entry or are there other regulations on these matters?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1—4—70-ல் இருந்து அவர்கள் பணியில் சேர்ந்துகொண்டு வந்திருந்தாலும்கூட, ஏற்கெனவே வரன்முறைப்படுத்தப்பட்டவர்கள் பட்டியலுக்குப் பின்னால்தான் இவர்கள் வர முடியும். அந்த நிலைமைகளைப் பயன்படுத்தித்தான், இப்போது தேர்வு ஆணைக் குழு எத்தனை பேரைத் தேர்ந்தெடுத்து வரன்முறைப்படுத்துகிறதென்பதைப் பார்த்து, அதில் எத்தனை பேர் விடுபட்டிருக்கிறார்களோ அவர்களைப் பின்னால் வரன்முறைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும். அவர்கள் சேர்ந்த நாளிலிருந்து வைத்தோமானால், பின்னால் வரன்முறைப்படுத்தப்பட்டவர்களுக்கும் முன்னால், இவர்களை வரன்முறைப்படுத்திவிட்டதாக ஆகிவிடும். ஆகவே தேர்வு ஆணைக் குழுவினுடைய முடிவுக்கு இணங்கத்தான் நாமும் வரன் முறைப்படுத்த வேண்டும்.

THIRU M. RAJAH IYER : Mr. Chairman, Sir, after 1st April 1970, we have appointed some of these B.T. Assistants in the Government 'A' Wing, since after that date no Government 'B' Wing B.T. Assistants have been appointed, as every school that has been opened has been 'A' Wing School. Therefore, will that concession apply to the 'A' Wing schools founded after 1st April 1970?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 'ஏ' விங்கைப் பொறுத்தவரையில், எப்போதும்போல் தேர்வு ஆணைக்குழு மூலமாகத்தான் அவர்கள் நியமிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இப்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் எல்லாம் 'பி' விங்கைப் பொறுத்துள்ள காரணத்தால், அவர்களுக்கு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்று கருதுகிறேன்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, 1—4—1970-க்குப் பிறகும், வருடத்திற்கு 50, 55 பள்ளிகள் வீதம், முன்னால் 'பி' விங்கென்று சொல்லு கிறமாதிரி, அதை 'ஏ' விங் என்றே கூறி, ஆரம்பித்திருக்கிறோம். ஆகையால், இந்தச் சலுகைகள், அரசினர் 'ஏ' விங் என்று கூறப்படும் பள்ளிகளுக்கும் கிடைக்குமா? அதைப்பற்றி அரசு ஆராயுமாவென்று தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றி விவரம் இல்லாத காரணத்தால், அதுபற்றித் தனியாகப் பரிசீலித்து தக்க முடிவு எடுக்கலாம்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, 1—4—1970-க்கு முன்னால் டிஸ் டிரிக்ட் போர்டு பள்ளிகளிலிருந்த ஆசிரியர்கள், அரசுப் பள்ளிகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அதே ஊழியக் காலமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டி ருக்கிறது. அதேபோல ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளாக இருந்தவை, உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்படுகின்றன. அப்பொழுது அந்த ஆசிரியர் களும் மாற்றப்படுகிறார்கள். 1—4—1970-க்கு முன்னால் டிஸ்ரிக்ட் போர்டு பள்ளி களிலிருந்து வந்த ஆசிரியர்களின் ஊழியக் காலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப் பட்டதைப்போல, இந்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர் களை, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களாக எடுத்துக்கொள்ளும்போது, அவர்க ளுடைய ஊழியக் காலத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ள அரசு முயலுமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஏற்கெனவே டிஸ்டிரிக்ட் போர்டு இருந்த காலத்தில், இரண்டு பள்ளிகளும் ஒரே அமைப்பின் கீழே இருந்தபோது பிரிக்கப்பட்டது. அப்படிப் பிரித்த பிறகு, துவக்கப் பள்ளி களுக்கு ஒரு பிரிவும், உயர் நிலைப் பள்ளிகளுக்கு ஒரு பிரிவும் ஆக்கப்பட்டு, ஒரு ஸ்பெஷல் ஆபீசரின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஆகவே அதற்கு முன்னால் எடுக்கப்பட்டவர்களுடைய பணிக் காலத்தைச் சேர்த்துக்கொள்ளுவதில் பொருள் இருந்தது. அதற்குப் பிறகு, அரசு உயர்நிலைப் பள்ளிகள் என்று ஆக்கப்பட்டு, அதிலே சேர்த்துக்கொள்ளப்படுகின்றபோது அதற்காகத் தனி யான வரன்முறைகள், மற்றவைகள் இருக்கின்ற காரணத்தால், அதற்கு முன் னால் டிஸ்ரிக்ட் போர்டு சர்வீசிலே பணி புரிகின்ற தன்மைக்கு, அரசிலிருந்து பிரிக்கப்பட்டதற்குப் பிறகு சேர்ப்பதிலே இடர்ப்பாடுகள் வருகின்றன. அதன் காரணமாகப் பலரிடத்திலிருந்தும் முறையீடுகள் வருமென்ற காரணத்தால், அதற்கு இடமில்லையென்று குறிப்பிடப்பட்டிருந்தது.